# சேலத்தில் 10.88 லட்சம் பேருக்கு பொங்கல் தொகுப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கி பேச்சு!



சேலம், ஜன. 9 - முதலமைச்சர் அவர்கள் சென்னையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணியினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து,

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டத்தில் உள்ள 10,88,238 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணியினை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் சென்னையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணியினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் நேற்று (08.01.2026) சேலம், கன்னங்குறிச்சி நியாய விலைக் கடையில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணியினை துவக்கி வைத்தார்கள்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது

முதலமைச்சர் அவர்கள், தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தி னர்களுக்கு பொங்கள் பரிசு தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பும். ரொக்கப் பரிசாக ரூ.3000/ வழங்கிட அறிவித்து இன்றைய தினம் தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதன்படி பொங்கல் திருநாளை முன்னிட்டு, வேட்டி மற்றும் சேலை இலவசமாக வழங்கப்படவுள்ளன. பொங்கல் பரிசு தொகுப்பு பொருளான பச்சரிசி 1 கிலோ ரூ.25/ம், சர்க்கரை 1 கிலோ ரூ.48.54/ம், முழு நீளக் கரும்பு ஒன்றுக்கு ரூ.38/ம் ஆக மொத்தம் ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.111.54 மதிப்பில் மொத்த குடும்ப அட்டைகளுக்குரிய செலவின மதிப்பு ரூ.248.66 கோடி ஆகும். மேலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகை ரூ.3000/ வீதம் மொத்தம் ரூ.6936.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் உள்ள 10.87.256 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் 982 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 10,88,238 குடும்பங்களுக்கு ரூ.12.14 கோடி மதிப்பில் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் பொங்கல் பரிசு ரொக்கம் வழங்குவதற்காக ரூ.326.47 கோடி வழங்கிட நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டு இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பொங்கல் பரிசு, நகர்புறப் பகுதிகளில் முதல் நாள் முற்பகல் 100 பேருக்கும் பிற்பகல் 100 பேருக்கும் மற்றும் இரண்டாம் நாள் முதல் நாள் ஒன்றுக்கு 300 (முற்பகல் 150, பிற்பகல் 150) குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கும் வகையில் குடும்ப அட்டைதாரர்களின் வீட்டிற்கே சென்று நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் மூலம் டோக்கன் வழங்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் 08.01.2026 முதல் 14.01.2026 வரை பொங்கல் பரிசு தொகுப்பு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். பொங்கல் பரிசு டோக்கனில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களின் படி, குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைக்கு சென்று பெற்றுக்கொண்டு தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு அரசு தூய்மை பணியாளர் நல வாரியத்தலைவர் டாக்டர் திப்பம்பட்டி. வெ.ஆறுச்சாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண் இயக்குநர் மா.குழுந்தைவேலு, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜ்குமார் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பெரும் சாலையில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" என்ற பரப்புரைக் கூட்டம் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து ஒன்றிய துணைச் செயலாளர் சிவனேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கே.ஆர்.என்.போஸ், முன்னாள் எம்.எல்.ஏ சுப. மதியரசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாணவரணி சந்திரசேகர் பாலமுருகன், பாஸ்கரன், சாரங்கபாணி உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், டி.சண்முகபுரம் ஊராட்சி ஆத்திகிணறு கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.12.43 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லக்ஷ்மி பிரியா, கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதகண்ணன், எட்டையாபுரம் பேரூர் கழக துணை செயலாளர் மாரியப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மனம் கவர்ந்த முதல்வராக திகழ்கிறார்!

# மக்களின் மனதில் மகிழ்ச்சிப் பொங்கல்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 9 - "தினகரன்" நாளேடு பொங்கல் அறிவிப்புகள் குறித்து மக்களின் மனம் கவர்ந்த முதல்வராக திகழ்கிறார் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றும் மக்களின் மனதில் மகிழ்ச்சிப் பொங்கல் பொங்குகிறது எனவும் கூறி பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளது.



தினகரன்

ஜனவரி 8, 2026 வியாழக்கிழமை

மகிழ்ச்சி பொங்கல்

தமிழக மக்களுக்கு புத்தாண்டு புத்துணர்வோடு பிறந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுத்தடுத்து செய்து வரும் அறிவிப்புகள் மக்களை மகிழ்ச்சிக்கடலில் திளைக்க வைத்திருக்கிறது. முதல்கட்டமாக அரசு ஊழியர்களுக்கு கடந்த 3ம் தேதி உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை முதல்வர் அறிவித்தார். இதனால் கடந்த 2003 முதல் போராட்டம், ஆர்ப்பாட்டம் என்றிருந்த அரசு ஊழியர்கள் 23 ஆண்டுகளுக்கு பின் தங்களது கோரிக்கை நிறைவேறிய உற்சாகத்தில் உள்ளனர். பட்டாசு வெடித்து மகிழ்ச்சியை கொண்டாடினர். இந்த திட்டத்துக்கு தமிழக அமைச்சரவையிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், இத்திட்டம் குறித்த கூடுதல் தகவல்களுடன் விரைவில் அரசாணை வெளியிடப்பட உள்ளது.

அது வருமாறு:

தமிழக மக்களுக்கு புத்தாண்டு புத்துணர்வோடு பிறந்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுத்தடுத்து செய்து வரும் அறிவிப்புகள் மக்களை மகிழ்ச்சிக்கடலில் திளைக்க வைத்திருக்கிறது. முதல்கட்டமாக அரசு ஊழியர்களுக்கு கடந்த 3ம் தேதி உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை முதல்வர் அறிவித்தார். இதனால் கடந்த 2003 முதல் போராட்டம், ஆர்ப்பாட்டம் என்றிருந்த அரசு ஊழியர்கள் 23 ஆண்டுகளுக்கு பின் தங்களது கோரிக்கை நிறைவேறிய உற்சாகத்தில் உள்ளனர்.

பட்டாசு வெடித்து மகிழ்ச்சியை கொண்டாடினர். இந்த திட்டத்துக்கு தமிழக அமைச்சரவையிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், இத்திட்டம் குறித்த கூடுதல் தகவல்களுடன் விரைவில் அரசாணை வெளியிடப்பட உள்ளது. அடுத்தகட்டமாக ரேஷன்கார்டு தாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு அறிவிக்கப்பட்டது. ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழு நீள கரும்பு, இலவச வேட்டி மற்றும் சேலை, முந்திரி, திராட்சை, ஏலக்காய் உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.

இதற்காக தமிழக அரசு ரூ.248 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கு தேவையான கரும்பு விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. பொங்கல் தொகுப்பு அறிவிக்கப்பட்ட நிலையில், ரொக்கப்பணம் அறிவிப்பு குறித்து தமிழக மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். தமிழக அரசும் இம்முறை ரொக்கப்பணம் எவ்வளவு வழங்குவது என்பது குறித்து தீவிரமாக ஆய்வு செய்து வந்தது.

இறுதியாக பொங்கல் தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் வழங்கப்படுமென்ற சர்க்கரை பொங்கலை விட இனிப்பான தகவலை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். பொங்கல் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும் இன்று சென்னையில் துவக்கி வைக்க உள்ளார். பொதுவாக, தீபாவளிக்கு அனைவரும் புது துணி, இதர செலவினங்களை செய்வது வழக்கம்.

புது துணி எடுத்தோ அத்தியாவசியப் பொருட்கள் வாங்கியோ கொண்டாடலாம். சுமார் 2.22 கோடி அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயனடைய உள்ளனர். இதற்காக வீடுகள்தோறும் டோக்கன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பெற முடியாதவர்களுக்கு ரேஷன் கடைகளிலும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டோக்கனில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் போய் பெற்றுக் கொள்ளலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 200 பேருக்கு பொங்கல் பணம், பொருட்கள் வழங்கப்பட உள்ளது. வரும் 14ம் தேதிக்குள் பொங்கல் தொகுப்பு + ரூ.3 ஆயிரம் வழங்கி முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்கும் திட்டத்தையும் முதல்வர் தொடங்கி வைத்தார். இதன்மூலம் 20 லட்சம் மாணவர்கள் பயனடைய உள்ளனர்.

மேலும், தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு, பல கோடி மதிப்பில் பல லட்சம் ஏழை, எளிய மக்கள் மற்றும் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். ஏற்கனவே, விடியல் பயணத் திட்டம், மகளிர் உரிமைத்தொகை திட்டம், மாணவர்களுக்கான காலை உணவுத்திட்டம், மக்களை தேடி மருத்துவம், நான் முதல்வன், புதுமைப்பெண், தவப்புதல்வன் உள்பட எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி, மக்களின் மனம் கவர்ந்த முதல்வராக மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.

மேலும், அடுத்தடுத்து சில முக்கிய திட்டங்களும் அரசின் பரிசீலனையில் உள்ளன. அடுத்த வாரம் பொங்கல் பண்டிகை நாட்கள் வர உள்ள நிலையில், முதல்வரின் அடுத்தடுத்த அறிவிப்புகள் தமிழக மக்களின் மனதில் மகிழ்ச்சிப் பொங்கலை உருவாக்கியிருக்கிறது என்பது மிகையல்ல...இவ்வாறு 'தினகரன்' முதல்வரை பாராட்டியுள்ளது.

# சென்னை - விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## ஆ.இராசா எம்.பி – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை – விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (10.01.2026 – சனிக்கிழமை) நண்பகல் 12.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஓட்டல் அகார்டில் நடைபெறும். இக்கூட்டத்தில் சென்னை – விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட அனைத்து மாவட்ட கழகச் செயலாளர்களும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள்: கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 08.02.2026 அன்று மறைமலை நகரில் நடைபெற உள்ள பூத் கமிட்டி (BLA2, BLC) முகவர்கள் சந்திப்பு குறித்து.

| | | |
|---|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **ஆ.இராசா எம்.பி.,** | **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** |
| சென்னை | கழக துணைப் | அமைச்சர் – செயலாளர் |
| 08.01.2026 | பொதுச் செயலாளர் | கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. |



மதுரை மாநகர் மாவட்டம், ஆரப்பாளையம், பகுதிக்குஉட்பட்ட, 57 வது வட்டகழகத்தில், பாகம் எண் 81, 97 க்குரிய PLA||, PLAC கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திருக்கு 57 வது வட்ட கழக செயலாளர் சுரேஷ் தலைமை தாங்கினார். PLA || பாண்டியராஜன், வீராசாமி வரவேற்புரையாற்றினார். "என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி" கழகத் தோழர்கள் மக்களை சந்தித்து அரசின் சாதனைகள் மற்றும் முதல்வர் தமிழக மக்களுக்காக அல்லும் பகலும் பாடுபடுவதையும் எடுத்துறைத்து மக்களிடம் வாக்கு கேக்குமாறு, மாநில கழக பொதுக்குழு உறுப்பினர் வைகை எம்.பரமன், ஆரப்பாளையம் பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ்.மாறன் உரையற்றினார்கள். கூட்டத்தில் அவை தலைவர் சங்கர், துணை செயலாளர் சரவணன், பொருளாளர் ரமேஷ், வட்டப் பிரதிநிதிகள் தாத்தா மாரி, விருமாண்டி, ரவி, பால்பாண்டி, கழக இளைகரணி ரவிசங்கர், கிரேவா மற்றும் மகளிரணியினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஏ. காதர்
### சனவரி 9 (2011)



இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றி வந்த இவர், 1967ஆம் ஆண்டு மண்டபம் நகரக் கழகச் செயலாளராகவும் – 1983ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டக் கழகப் பொருளாளராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்து, இறுதியில் சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

1967ஆம் ஆண்டு மண்டபம் ஊராட்சிமன்றக்குழுத் தலைவராகவும் – 1996ஆம் ஆண்டு இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவராகவும் – 1998ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீத்தா வேதநாயகம்
### சனவரி 9 (2019)



கழகக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு, பள்ளிப் பருவத்திலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

புதுச்சேரி மாநிலத்தில், பகுதிச் செயலாளர், துணைத் தலைவர், மாநிலக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுச்சேரி நகர்மன்ற உறுப்பினராக மூன்று முறையும் – சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுச்சேரியில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் – துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.